# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண்: 243/2018/பே**
**ஆணை நாள். 14–06–2019.**

**திரு. M. ஆறுமுக நயினார்,**
**உரிமையாளர்,**
**கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,**
**2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,**
**மைலாப்பூர்,**
**சென்னை – 600 004.**

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

சென்னை–4, மைலாப்பூர், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலையினைச் சேர்ந்த திரு. எம்.ஆறுமுக நயினார், என்பவரது 21.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 243/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் 2014–15ம் ஆண்டில் மேற்கொண்ட பணிகளுக்கான ஒப்பந்த விளம்பரங்கள் தனது நிறுவனம் மூலம் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் எண்.351/2014–15 நாள். 03.03.2015ன்படி தொகை ரூ. 54,800/–ஐ இதுவரை மேற்படி ஆறுமுகநேரி பேரூராட்சியில் இருந்து தங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

31.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

06.02.2019 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பான இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு 27.02.2019 அன்று ஆஜராகுமாறு இரு தரப்பினருக்கும் ஆணையிடப்பட்டது.

27.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரர் சார்பில் ஆஜரான திரு.கே.சிவராமன் தனது வாக்குமூலத்தில் ஆறுமுகநேரி பேரூராட்சி பணி சம்பந்தமாக விளம்பரம் செய்த வகையில் பட்டியல் எண்.351/2014–15 நாள். 03.03.2015ன்படி ரூ.54,800/– இதுவரை பேரூராட்சி செயல் அலுவலரால் தங்களது நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை எனவும் பலமுறை நினைவூட்டு அனுப்பியும் தொகை வழங்காமல் உள்ளதால் மேற்படி தொகையினை வழங்க ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலர் 27.02.2019 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் உரிய விளக்கத்தினை சமர்ப்பிக்குமாறு 01.03.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் ஆணையிடப்பட்டது. அதன்படி வரப்பெற்ற ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலரின் 11.03.2019 நாளிட்ட விளக்க அறிக்கையில் முறைமன்ற நடுவ 27.02.2019 நாளிட்ட விசாரணைக்கு வர ஆணையிடப்பட்ட அழைப்பாணையினை பெற்றுக் கொண்ட முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் மருத்துவ விடுப்பில் சென்று விட்டதாகவும், தற்போதைய செயல் அலுவலர் 09.03.2019 முதல் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின்படி அலுவலகக் கோப்பினை ஆய்வு செய்ததில் முறையீட்டு மனுதாரரின் பட்டியல் உரிய மேலொப்பம் பெறும் பொருட்டு திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பத்துடன் பட்டியல் பெறப்பட்டவுடன் தொகை வழங்க ஆவண செய்யப்படுமென உறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தற்போது வரப்பெற்றுள்ள முறையீட்டு மனுதாரரின் 10.06.2019 நாளிட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம்,ஆறுமுகநேரி பேரூராட்சியில் இருந்து தங்கள் நிறுவனத்திற்கு வரப்பெற வேண்டிய பட்டியல் நிலுவைத் தொகை ரூ.54,800/– ஆறுமுகநேரி பேரூராட்சியிலருந்து காசோலை எண். 900331/நாள் 29.05.2019ன் மூலம் பெறப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரது கோரிக்கை நிறைவடைந்ததாகக் கருதி இப்பொருள் தொடர்பான நடவடிக்கை முற்றாக்கப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 19/6/2019

19/6/19

பெறுநர்

1.செயல் அலுவலர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

2.திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.